தமிழர்களின் இதயத் துடிப்பு

# குமுதம்

நம்பர் 1 தமிழ் வார இதழ்

₹ 25 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹ 30 (மற்ற மாநிலங்களில்)

21.12.2022



## முரட்டு பாலா! அடங்காத சூர்யா...

வெளிவராத தகவல்கள்...

## இப்போ அஜித்... அடுத்து விஜய்!

ஹெச்.வினோத் xclusive

## தனுஷ் என் ரியல் ஃப்ரெண்ட்!

ஜி.வி. பிரகாஷ் Open Talk

ஜி.எஸ்.எஸ்.

# இனி எந்தக் காசும் செல்லாது?




# ஊழல், லஞ்சத்தை ஒழிக்கும் ஒரே ஆயுதம்!

## வந்துவிட்டது டிஜிட்டல் கரன்ஸி...



ஜிட்டல் இந்தியாவின் அடுத்த கட்ட வளர்ச்சி, டிஜிட்டல் கரன்ஸி. அதாவது காசு கையிலயும் இருக்காது; பையிலயும் இருக்காது; ஸ்மார்ட்போன்தான் பாக்கெட், பர்ஸ் எல்லாம். இப்பக்கூட பெரும்பாலான கொடுக்கல் வாங்கல் போன்லதான் என்றாலும் சாதாரண கரன்ஸிபோல இதை விரும்பினால் காகிதப் பணமாகவும், தேவைப்படும்போது வாலட் மணியாகவும் பயன்படுத்த முடியாது. ஒன்ஸ் டிஜிட்டலுக்கு மாறினால் மாறினதுதான்.

*சரி, இப்படி ஒரு கரன்ஸிக்கு இப்ப என்ன அவசியம்?*

சில வருடங்களாகவே உலக அளவில் பிட்காயின் போன்ற கிரிப்டோ கரன்ஸிகள் அதிக அளவில் புழங்கத் தொடங்கின. இதில் பல்வேறு மோசடிகள் நடைபெற்றன. இந்த கிரிப்டோ கரன்ஸி எந்த ஒரு நாட்டிலும் அந்த நாட்டு மத்திய வங்கியின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை என்பதால் அவற்றில் நடைபெறும் குற்றங்களையும் மோசடிகளையும் தடுக்க முடியாமல் போனது. ஆனால் இப்போதைய டிஜிட்டல் கரன்ஸிகளை உருவாக்குவதே இந்திய ரிசர்வ் வங்கிதான். அதனால் முறைகேடுகள் நடப்பது தவிர்க்கப்படும்.

மொத்தப் பரிவர்த்தனைகளுக்கான டிஜிட்டல் கரன்ஸி, நவம்பர் 1ம் தேதியே வெளியிடப்பட்டு விட்டது. சில்லறை பரிவர்த்தனைகளுக்கான டிஜிட்டல் கரன்ஸி டிசம்பர் 1ம் தேதியிலிருந்து வெளியிடப்பட்டது.

தொடக்கத்தில் பாரத ஸ்டேட் வங்கி, எஸ் வங்கி, ஐ.டி.எஃப்.சி. வங்கி, ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி ஆகிய நான்கு வங்கிகள் டிஜிட்டல் கரன்ஸியை வெளியிடுகின்றன. முதல்கட்டமாக டெல்லி, மும்பை, பெங்களூரு, புவனேஷ்வர் ஆகிய நான்கு நகரங்களில் சோதனை அடிப்படையில் வெளியிடப் பட்டுள்ளன. அவை எல்லாம் சில குழு பயன்பாட்டுக்குள் இருக்கின்றன. இதிலுள்ள நடைமுறைக் குறைபாடுகள் களையப்பட்டு பின்னர் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வந்துசேரும். அப்போது செல்போன், கம்ப்யூட்டர் இல்லாதவர்கள் இதைப் பயன்படுத்த, பொது டிஜிட்டல் கரன்ஸி பயன்பாடு மையங்கள் கூட வரலாம். எதுவும் போகப்போகத்தான் தெரியும்.



**டிஜிட்டல் கரன்ஸியின் முக்கிய நோக்கம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இருக்க வேண்டும் என்பதுதான்.**

**டிஜிட்டல் கரன்ஸியின் நோக்கம் என்ன? எளிய மக்களின் பயன்பாட்டுக்கு வருமா? அதில் என்ன பிரச்னை இருக்கும்? இப்போது யார் இதைப் பயன்படுத்துகிறார்கள்?** பொருளாதார ஆலோசகர் எஸ்.சுப்பிரமணியிடம் கேட்டோம்...

"டிஜிட்டல்




கரன்ஸியின் முக்கிய நோக்கம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக இருக்க வேண்டும். அதன் மூலம் கருப்பு பண நடமாட்டத்தை, பதுக்கலை முற்றிலும் ஒழிக்கவேண்டும் என்பதுதான். டிஜிட்டல் கரன்ஸி பயன்பாடு முழுமையடையும்போது காகிதப் பணம் முற்றிலும் ஒழிந்துவிடும். அதனால் பதுக்க முடியாது.

டிஜிட்டல் கரன்ஸியை நீங்கள் உங்கள் வங்கிக் கணக்கு மற்றும் வங்கிகளின் செயலிகளை பயன்படுத்தி பராமரிக்கப்படும் வாலட்டுகளில் மட்டுமே வைத்திருக்க முடியும். அதனால் கணக்குக் காட்டியே தீர வேண்டும்.

தற்போதைய நிலையில் உங்களிடம் இருக்கும் பணத்தை நீங்கள் டிஜிட்டல் கரன்ஸியாக மாற்றிக்கொள்ளலாம். அந்தப் பணம் உங்கள் டிஜிட்டல் வங்கிக் கணக்குக்கு வந்துசேரும். நீங்கள் வாங்கும் தொகைக்கு ஏற்ப தற்போது புழக்கத்தில் இருக்கும் நோட்டுகளாக, நாணயங்களாக உங்கள் கணக்கில் அது செலுத்தப்படும். அவை அனைத்துக்கும் சீரியல், எண் எல்லாம் இருக்கும்.

அதாவது உங்கள் கணக்கில் இருக்கும் ஒவ்வொரு பைசாவும் அதற்குரிய எண்களோடு உங்கள் கணக்கில் பதிவு செய்யப்படும். அதை நீங்கள் மற்றொரு டிஜிட்டல் கணக்குக்கு மாற்றும்போது அந்த எண்களும் குறிப்பிடப்படும். அது ஆயிரம் கணக்குகளுக்கு அடுத்தடுத்து மாற்றப்பட்டாலும் ஒவ்வொரு முறையும் அதன் சீரியல் எண்ணும் குறிப்பிடப்படுவதால் அந்த கரன்ஸி எப்போது யார் யாரிடமிருந்தெல்லாம் எங்கு மாறியிருக்கிறது என்பது கண்காணிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும். அதனால் அந்தப் பணம் உங்கள் கணக்குக்கு வந்தவிதம்

குறித்தோ, கொடுக்கப்பட்ட நபர் குறித்தோ அரசிடம் தவறான தகவலைத் தரவே முடியாது.

இதன் மூலம் கருப்புப் பணம் மட்டுமல்ல... பயங்கரவாத குழுக்களின் கைகளுக்குப் பணம் எங்கிருந்து வருகிறது? போகிறது என்பதெல்லாம் சுலபமாகத் தெரிந்துவிடும். எல்லாவற்றுக்கும் மேலாக ஊழல், லஞ்சத்தை முற்றிலும் ஒழிப்பதற்கு டிஜிட்டல் கரன்ஸிதான் ஒரே வழி. நோட்டில் பவுடர், மருந்தெல்லாம் தடவி, கைரேகை எடுத்து, கோர்ட்டுக்குப்




போய் அதை நிரூபித்து, சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கும் கால விரயமெல்லாம் இருக்காது.

பொதுமக்கள் பயன்பாட்டில் இதில் உள்ள நடைமுறை சிக்கல் என்னவென்றால், உங்களிடமுள்ள பணத்தை டிஜிட்டல் கரன்ஸியாக மாற்றிவிட்டால் திரும்ப அதைக் காகிதப் பணமாக மாற்ற முடியாது. சில்லறை வர்த்தகத்தில் டிஜிட்டல் கரன்ஸியும், கணக்கும் வைத்திருப்பவர்களிடம் மட்டுமே டிஜிட்டல் கரன்ஸி மூலம் பொருட்களை வாங்கவோ, விற்கவோ முடியும்.

சாதாரண கொடுக்கல் வாங்கலில்கூட டிஜிட்டல் கரன்ஸியை, டிஜிட்டல் கணக்கு வைத்திருப்பவர்களுக்குள் மட்டுமே மாற்றிக்கொள்ள முடியும். உங்கள் டிஜிட்டல் கணக்கில் எத்தனை கோடிகள் இருந்தாலும் அதற்கு வட்டி கிடைக்காது. ஏற்கெனவே நீங்கள் வாங்கியிருக்கும் கடனுக்கு வட்டியை டிஜிட்டல் கரன்ஸியால் கட்டலாம்.

வெகுவிரைவில் வங்கிக் கணக்குகள் அனைத்தும் டிஜிட்டல் கரன்ஸி கணக்காக மாற்ற வேண்டிய கட்டாயமும் மக்களுக்கு உருவாகலாம். இதில் என்னதான் நடைமுறை சிக்கல் இருந்தாலும், உலகத்தின் போக்கில் நாமும் டிஜிட்டல் கரன்ஸிக்கு மாறுவதைத் தவிர வேறுவழியே இல்லை. இதில் சாதாரண மக்களுக்கும் பல நன்மைகள் இருப்பதைப் புழக்கத்தில் வரும்போது மக்கள் தெரிந்துகொள்வார்கள். தற்போது நெட் பாங்கிங்கில் நடைபெறும் முறைகேடுகள், குழப்பங்கள் எல்லாம் இதில் முற்றிலும் தவிர்க்கப்படலாம்.

இரண்டு தனிநபருக்கு

எஸ்.சுப்பிரமணி



இடையே நடக்கும் பணப் பரிமாற்றமாக இருந்தாலும் சரி... இரண்டு வங்கிகளுக்கு இடையே நடக்கும் பணப்பரிமாற்றமாக இருந்தாலும் சரி... அனைத்தும் மத்திய ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பின் கீழ்தான் நடக்க முடியும் என்பதால் பணத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**உங்களிடமுள்ள பணத்தை டிஜிட்டல் கரன்ஸியாக மாற்றிவிட்டால் திரும்ப அதைக் காகிதப் பணமாக மாற்ற முடியாது.**

அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் பிச்சைக்காரனுக்குப் போடுவதற்குக்கூட உங்கள் பாக்கெட்டில் ஒரு ரூபாய் சில்லறையாக இருக்காது, உங்கள் வாலட்டில்தான் டிஜிட்டல் காசாக இருக்கும். பிச்சை எடுப்பவனும் டிஜிட்டல் அக்கௌன்ட், அல்லது வாலட் வைத்திருப்பான். ஸ்மார்ட்போன் இல்லாது இயங்காது உலகம்'' என்கிறார் சுப்பிரமணி.

கணக்கில்லாமல் பணம் வைத்திருக்கும் அரசியல்வாதிகளும், பதுக்கல் பேர்வழிகளும், குறுக்கு வழியில் பணம் சேர்ப்பவர்களும் இந்தக் கட்டுப்பாட்டுக்குள் வருவார்களா என்ற கேள்வி நியாயவான்கள் ஒவ்வொருவருக்கும் எழும். அவர்கள் எல்லாம் எப்போதோ எந்தக் கண்காணிப்பு வளையத்துக்குள்ளும் வராத கிரிப்டோ மாதிரியான கரன்ஸிகளை குவித்திருப்பார்கள். உலகம் முழுவதும் தங்களுக்கென்று ஒரு கரன்ஸியுடன் மாற்றுப் பொருளாதாரத்தை அவர்கள் உருவாக்கிக் கொள்வார்கள். மற்றபடி ஃபிளைட் டிக்கெட்டுக்கும், பெட்ரோல் போடவும், பிரியாணி சாப்பிடவும் மட்டும் இந்த டிஜிட்டல் கரன்ஸியை வாலட்டில் வைத்திருப்பார்கள்.

நமக்குத் தெரிந்து, இதனால் நடக்கலாம் என நாம் நினைக்கும் நல்ல விஷயம், போதைப் பொருள் விற்பனையும், பயன்பாடும் கட்டுப்படுத்தப் படலாம். அதனால் இளைய சமுதாயம் பாதுகாக்கப்படலாம். இஷ்டத்துக்கு கல்விக்கட்டணம், மருத்துவக்கட்டணம் எல்லாம் வசூலிக்க முடியாது, அரசு அதைக் கட்டுப்படுத்த நினைத்தால்...

நடக்குமா பார்க்கலாம்!